*International Multidisciplinary Innovative Research Journal*
*-An International refereed e-journal*

ISSN: 2456 – 4613
Volume – V Issue – 1
December -2020

# கலித்தொகையில் கைக்கிளை

சரண்யாதேவி.இ,
உதவிப் பேராசிரியர்,
முதுகலைத்தமிழ்த்துறை (சுயநிதிப் பிரிவு)
வே.வ.வன்னியப்பெருமாள்பெண்கள்கல்லூரி,(தன்னாட்சி)
விருதுநகர், தமிழ்நாடு, இந்தியா.

**Corresponding Author mail ID:saranyadevii@vvvcollege.org**

## ஆய்வுச் சுருக்கம்

இலக்கியம் என்பது இலக்கணத்தையும் உள்ளடக்கியதாகும். இலக்கியப் பொருளின் இயல்பு விளக்கம் கூறுவனவாக இலக்கண நூல்கள் விளங்குகின்றன. இலக்கியம் என்பது இலக்கணத்தையும் உள்ளடக்கிய விரிந்த பொருளினை உடையதாக உள்ளது. கைக்கிளை பற்றிய இலக்கணக் கோட்பாடுகளைக் கலித்தொகையில் இடம் பெறும் பாடல்களுடன் பொருத்திக் காண்பதே இவ்ஆய்வின் நோக்கமாகும். கைக்கிளைக் காதலின் முன் நிகழ்வுகள் ஆராயப் பெற்றுள்ளன.

**குறிப்புச் சொற்கள்:** சங்க இலக்கியம் - கலித்தொகை- கைக்கிளை- காட்சி- ஐயம் - துணிவு- குறிப்பறிதல்

## முன்னுரை

சங்க இலக்கியங்களில் காணப்படுகின்ற அகப்பாடல்கள் தனித்தனிக் காதலர்களின் அகவாழ்வு பற்றியவை. அப்பாடல்கள் காதலர்களின் அகவாழ்வின் சிறுசிறு பகுதியினை மட்டும் கூறுகின்ற தனித்தனிப் பாடல்களாகக் காணப்படுகின்றன. தலைவன், தலைவி இருவர்உள்ளமும் இணைதல் அகன் ஐந்திணையாகும். கைக்கிளை என்பது ஒருபாற் காதலாகும். சங்க அகப்பாடல்களுள் கைக்கிளைத் திணையில் அமைந்தபாடல்கள் கலித்தொகையில் மட்டுமே இடம் பெற்றுள்ளன. கலித்தொகையில் அமைந்துள்ள கைக்கிளைக் காதல் பாடல்களை இக்கட்டுரையில் ஆய்வோம்.

## கைக்கிளைக் காதல்

நம்பியகப்பொருள் களவியல் பகுதியில், களவெனப் படுவதுயாழோர்

கூட்டத்தின் இயல்பு'எனக் கைக்கிளைக் காதலையே களவு வாழ்வின் தொடக்க நிலையாகக் கூறுகின்றது. இதனை,

**"மெய்க்கிளையாமோர்வேண்டும் புணர்ச்சிமுன்**
**கைக்கிளைநிகழ்தல் கடனெனமொழிப"** -

(அகப்பொருள்,நூற்பா.28)

என்ற நூற்பா வாயிலாக அறிய முடிகின்றது.

"தலைவன், தலைவி ஆகிய இருவரும் உள்ளப் புணர்ச்சியால் ஒன்றுபடுவதற்கு முன் ஒருவர் மேல் ஒருவர் காதல் நிகழ்வின் காலம் குறுகிய கால அளவே ஆயினும், அக்குறுகிய காலத்தில் அவ்இருவரில் ஒருவரிடத்தே தோன்றிய காதல் 'கைக்கிளைக் காதல்' என்று பேராசிரியர் மணிவேல் விளக்கம் தருகின்றார்.

## தொல்காப்பியத்தில் கைக்கிளை

காதல் உணர்வை அறிதற்கு இயலாதவளிடத்தே தன் காதல் உணர்வை வெளிப்படுத்துகின்ற தலைவன் ஒருவன் எவ்வகையான காதல் எதிர்மொழியையும் தன் காதலுக்கு உரிய தலைவியிடத்து இருந்து பெறான். எதிர்ச்சொல்லும் பெறான். இந்தநிலையில் துன்பம் அடைகின்ற தலைவன் தன்னுடைய காதல் உணர்வைத் தன்னோடும் அவளோடும் இயைபுபடுத்திப் பல முறை சொல்லிச் சொல்லி நிற்பான். இதனை,

**"காமஞ் சாலா இளமையோள்வயின்**
**ஏமஞ் சாலா இடும்பையெய்தி**
**நன்மையும் தீமையும் என்றிருதிறத்தான்**
**தன்னொடும் அவளொடும் தருக்கியபுணர்த்துச்**
**சொல்எதிர்பெறாஅன் சொல்லி இன்புறல்**
**புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே"** –

(தொல்காப்பியம்,பொருளதிகாரம்,நூற்பா.53)

என்பதால் அறியலாம்.

## கைக்கிளையின் பாகுபாடுகள்

இயற்கைப் புணர்ச்சிக்கு முன் நிகழும் காட்சி, ஐயம், துணிவு, குறிப்பறிதல் முதலியன கைக்கிளைக் காதலரிடத்து நிகழ்வன. அதனை நம்பியகப் பொருள் ஆசிரியர்,

**"காட்சிஐயந் துணிவுகுறிப்பறிவுஎன**
**மாட்சிநான்குவகைத்தேகைக்கிளை"** –

(அகப்பொருள் விளக்கம்,நூற்பா.118)

என்று கைக்கிளையின் பாகுபாடுகளைக் குறிப்பிட்டுள்ளார்.

## கலித்தொகையில் கைக்கிளை

ஓருறுப்பு நாடகம் என்பது போல ஒரு துறை கொண்ட திணை கைக்கிளை. 'புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே' என்ற நடையால் இத்திணை விரிவற்றது. துறை பல இல்லாதது என்பதை உணர முடிகின்றது. கலித்தொகையில் உள்ள நான்கு பாடல்கள் (56,57,58,109)கைக்கிளைத் திணைக்குரியவை.

## குறிஞ்சிக்கலியில் கைக்கிளை நிகழ்வுகள்

குறிஞ்சிக்கலி 56ஆம் பாடலில் வருகின்ற கைக்கிளைத் தலைவனிடத்துக் காட்சி, ஐயம், துணிவு, குறிப்பறிதல் என்ற நான்கு நிகழ்வுகளும் நிகழ்ந்ததை அறிய முடிகிறது. ஊரிடத்தே வளர்ந்த இளமரக்காவினுள் நீர் ஓடுகின்றவாய்க் காலிடத்தே நின்ற ஞாழல் மரத்தின் பூக்களைத் தலைவி சூடிக்கொண்டாள்.

நிறைந்தமதி, இனிய கதிர்களைக் கொண்டது போல், தலைவியின் முகம் ஒளியுடன் திகழ்ந்தது. அதனைக் கண்ட தலைவன்,

**"ஊர்க்கால் நிவந்தபொதும்பருள் நீர்க்கால்**
**கொழுநிழல் ஞாழல் முதிர் இணர்கொண்டு**
**கழுமமுடித்துக்கண்கூடு கூழை**
**சுவல்மிசைத் தாதொடுதாழஅகல்மதி**
**தீம்கதிர்விட்டதுபோலமுகன் அமர்ந்து**
**ஈங்கேவருவாள் இவள்யார்கொல்?"**-(பாடல்.56)

என்று தனக்குத் தானே கேட்டுக் கொள்கின்றான்.

தலைவியைக் கண்ட தலைவன் தெய்வ மகளோ, கூற்றமோ, பாவையோ என்று தனக்குள் ஐயம் கொள்வதை,

**"வல்லவன் தைஇயபாவைகொல்? நல்லார்**
**உறுப்புஎலாம் கொண்டு இயற்றியாள்கொல்?**
**வெறுப்பினால்**
**வேண்டுஉருவம் கொண்டதோர் கூற்றம்கொல்?"-**
**(**பாடல்.56)

என்ற அடிகள் உணர்த்துகின்றன.

தான் கண்ட தலைவியா இவள்? என ஐயுற்ற தலைவன், இவள் மானிடப் பெண் தான் என்று துணிந்து தெளிவடைகின்றான். இதனை,

**"இவளைக் காவார்விடுதல் கொடிய இயல்**
**பல்கலைச்சில்பூங் கலிங்கத்தள் ஈங்கு இதுஓர்**
**நல்கூர்ந்தார் செல்வ மகள்"** -(பாடல்.56)

என்ற அடிகள் புலப்படுத்துகின்றன.

தலைவன், தலைவியிடம் தான் கொண்ட காதலைக் கூறுகின்றான். தலைவிதன் காதலுக்கு உடன்படும் தன்மையை அவளுடைய மெய்ப்பாடுகளால் உணர்த்துவாள். அதனைத் தலைவன் குறிப்பால் அறிந்து கொள்வான்.

**"இவளைச் சொல்லாடிக் காண்பேன் தகைத்து**
**நல்லாய் கேள்"** -(பாடல்.56)

என்ற அடிகள் உணர்த்துகின்றன.

## தலைவனின் காதல் உள்ளம்

தலைவியின் அழகால் தலைவன் துன்பம் எய்திய போதும் அத்துன்பத்தினைத் தந்த தலைவியைக் குற்றம் கூறத் தலைவனுடைய காதல் உள்ளம் மறுக்கின்றது. இதனை,

**"நீயும் தவறில்லைநின்னைப் புறங்கடைப்**
**போதரவிட்டநுமரும் தவறுஇலர்**
**நிறை அழிகொல் யானைநீர்க்குவிட்டாங்கு**
**பறைஅறைந்தல்லதுசெல்லற்களன்னா**
**இறையேதவறுஉடையான்"** -(பாடல்.56)

என்ற அடிகள் காட்டுகின்றன.

இல்லத்தை விட்டுப் புறத்தே வந்த உன்மேலும் பிழையில்லை. புறத்தே வரவிடுத்த உன் பெற்றோர்மேலும் பிழையில்லை. போர் யானை குளத்திற்கு நீர் குடிக்க வந்தால், 'மத யானை வருகின்றது' விலகிச் செல்லுங்கள் என்று பறைகொட்டி முன்னறிவிப்பது அரசவழக்கம். அது போல நீ புறத்தே வரும் போதும் அரசன் தெரிவித்து இருக்க வேண்டும். அவ்வாறு அறிவிக்காத அரசனே பிழையுடையவன் என்பதன் மூலம் தலைவிமேல் காதல் கொண்ட தலைவனின் காதல் உள்ளத்தை அறிய முடிகிறது.

## தலைவனின் காதலை அறியாத தலைவி

தலைவியின் வனப்பு காண்போரைப் பேதலிக்கச் செய்தது. மன்மதனும் தன் அம்பினைக் கீழே போட்டு விடுவான். தலைவியின் அழகில் மயங்கித் தம் கணவர்

அவள் பின்னே சென்று விடுவாரோ என்றஞ்சி இல்லறப் பெண்டிர் கதவை அடைத்து வெளியே செல்லா வண்ணம் காத்தனர். தலைவி, பிறர் வருந்தும் படி நோய் செய்து, துன்புறுத்துவாளேயன்றி, அந்நோய் தீர்க்கும் மருந்து அல்லள் என்கிறான் தலைவன். இதனை,

**"இவள்தான் வருந்தநோய் செய்து இறப்பின்**
**அல்லால் மருந்துஅல்லள்"** - (பாடல் -109)

என்ற பாடலடிகள் வழி அறிய முடிகின்றது. தலைவனின் கைக்கிளைச் செயல் சொல்லளவில் நின்றொழிவது இவன் பலபடப் புனைந்தும், வருந்தியும், இன்புற்றும், பார்த்தும் கூறும் கருத்தெல்லாம் இவன்தன் செவியளவினவே. கண் அளவினவே. அவளுக்கு ஒன்றும் தெரியாது. அவள் இவனைச் சிறிதும் அறியாள். அவன் காதலையும் எண்ணாள்.

## மடன்மா கூறுதல்

இயற்கைப் புணர்ச்சிக்குப் பின்னர் தலைவியின் தமர் திருமணத்திற்கு உடன்படவில்லை எனில் தலைவன் மடலேறுவான். அது ஐந்திணையின் பாற்படும். தலைவி இசையாத நிலையில் தலைவன் மடலேறுதல் பெருந்திணை ஆகும். தலைவி மேல் காதல் கொண்ட தலைவன், தன் அன்பை ஏற்காத தலைவியைக் கண்டு, என் அன்பை ஏற்றுக் கொள்வாயாக என்று மீண்டும் மீண்டும் உரைத்த போது தலைவியானவள் ஏற்கவில்லை. அதனால் தலைவன், மடலேறி உற்றார்க்கும் மற்றார்க்கும் தெரிவித்துத் தலைவியை மணமுடிப்பான். குறைநிறைவேறாத தலைவன் பனைப் பொருட்களைக் கொண்டுவண்டி முதலியன செய்து தன் உடல் முழுவதும் சாம்பலைப்பூசிக் கொண்டு பூளைப்பூ, எருக்கம்பூ ஆகியவற்றை மாலையாகக் கட்டி அணிந்து கொண்டு பனங்கருக்கால் செய்யப்பட்ட குதிரையில் ஏறி, சிலர் அவ்வண்டியை இழுக்கச் செய்து, தலைவியின் உருவினை வரைந்து கையில் பிடித்துக் கொண்டு வீதி வழியாகச் செல்வது மடலேறுதல் ஆகும். "மடல் ஏறுவேன் என்று தலைவன் தன்நெஞ்சிற்குக் கூறுதல் 'கைக்கிளை' என்று நச்சினார்க்கினியர் குறிப்பிட்டுள்ளார்."

**"மறுத்து இவ்வூர்மன்றத்து மடல்ஏறி**
**நிறுக்குவென் போல்வல் யான்நீபடுபழியே"** –
(பாடல்.58)

என்ற அடிகள் தலைவன் மடல்மா ஏறுதலைக் கூறுவதாக அமைந்துள்ளன.

## முடிவுரை

இயற்கைப் புணர்ச்சிக்கு முன் நிகழும் கைக்கிளைக் காதல் சிறிது காலத்திற்குப்பின் ஐந்திணைக் காதலாகலாம். கைக்கிளைக் காதல் வயப்பட்டோர் தன் காதலரும்பைக் கிள்ளியெறிந்து விட்டு, வேறொருவரை மணம் புரிந்து கொள்ளலாம். இதற்கு யாதொரு தடையுமில்லை. கேடும் இல்லை. யாருடைய தூய்மையும் கெடுவதில்லை.

## துணைநூற் பட்டியல்


1. நச்சினார்க்கினியர் (உ_ஆ). கலித்தொகை
கழகவெளியீடு
திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த
நூற்குறிப்புக் கழகம் லிமிடெட் சென்னை.

2. நாற்கவிராசநம்பி அகப்பொருள் விளக்கம்
கா.ர.கோவிந்தராச முதலியார் (உ_.ஆ)
கழக வெளியீடு
திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த
நூற்குறிப்புக் கழகம் லிமிடெட் சென்னை.

3. பேராசிரியர் (உ_.ஆ) தொல்காப்பியம் (பொருளதிகாரம்)
கழக வெளியீடு
திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த
நூற்குறிப்புக் கழகம் லிமிடெட்
சென்னை.

4. மு.மணிவேல் கைக்கிளைக் காதல்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை.